DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF II ADDITIONAL CITY CIVIL COURT,

CHENNAI-600 104.

SC- 439/2019

Deposition of witness for Prosecution / Defence / Court

Name : Mr. Pazhani PW-3

Father Name :

Adress :

Age/Sex :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 15th day of July 2022.

---

**முதல் விசாரணை:-**

நான் நெ.31, சாந்தி நகர், கோவூர் மாங்காடு, சென்னை-128 என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 31/07/2019 அன்று இரவு சுமார் 10 மணியளவில் எனது மனைவியின் அக்கா மகன் தனுஷ் என்பவர் எனக்கு போன் செய்து எனது அப்பா ஸ்ரீதரை வாசு என்பவர் அடித்துவிட்டதாகவும் உடனே வரும்படி கூறினார். நான் உடனே எனது வீட்டிலிருந்து புறப்பட்டு சுமார் 11.30 மணியளவில் டோல்கேட் அருகே உள்ள பாலாஜி மருத்துவமனைக்கு சென்றபோது மருத்துவமனை உள்ளே இருந்து எனது அண்ணன் ஸ்ரீதரை எனது அண்ணி கலைவாணி மற்றும் ஆஜர் எதிரி வாசுவினுடைய அண்ணன் கணேசன் ஆகியோர் மருத்துவமனயைில் இருந்து வெளியே அழைத்து வந்தனர். நான் எனது அண்ணியிடம் என்ன என்று கேட்டதற்கு மிகவும் சீரியஸ் ஆக இருப்பதால் இங்கு அட்மிட் செய்ய மறுக்கிறார்கள் ஸ்டேன்லி மருத்துமனைக்கு போக சொல்லி கூறிவிட்டார்கள் என்று சொன்னார். அதன்பிறகு நானும் எனது அண்ணியும் ஆஜர் எதிரியின் அண்ணன் கணேசன் ஆகியோர் எனது அண்ணன் ஸ்ரீதரை ஸ்டேன்லி

மருத்துவமனைக்கு ஆட்டோவில் அழைத்து சென்றோம். மருத்துவமனையில் எனது அண்ணன் ஸ்ரீதரை அட்மிட் செய்தோம். நான் எனது அண்ணியிடம் என்ன பிரச்சினை என்று கேட்டதற்கு எனது அண்ணன் ஸ்ரீதர் வாசுவிடம் கடனாக ரூ.5000 வாங்கியதில் 3000 ரூபாய் திருப்பி கொடுத்ததாகவும் மீதி 2000 ரூபாய் தராததால் அந்த பணத்தை வாசு என்பவர் எனது அண்ணனிடம் கேட்க அப்போது ஏற்பட்ட வாக்குவாதத்தில் வாசு எனது அண்ணனை தாக்கியதாவும் அதனால் காயம் ஏற்பட்டதாகவும் கூறினார். தண்ணீர் கேனை தூக்கி எனது அண்ணனின் தலையில் போட்டதாகவும் கூறினார். இந்நிலையில் மருத்துவமனயில் சிகிச்சையில் இருந்த எனது அண்ணன் ஸ்ரீதர் மறுநாள் மாலை 6 மணிக்கு இறந்துவிட்டதாக எனது அண்ணி எனக்கு போன் செய்து கூறினார். இந்த வழக்கு சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தனர்.

<u>குறுக்கு விசாரணை:-</u>

கோவூரில் நான் 9 வருடமாக குடியிருக்கிறேன். நான் என்ன கூலி வேலை செய்கிறேன் என்றால் என்ன என்ன வேலை கிடைக்கிறதோ அதை செய்வேன். கோவூரில் இருந்து சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு செல்வதற்கு ஒரு மணி நேரம் ஆகும். தனுஷ் என்பவர் எனக்கு போன் செய்து சொன்னதால் நான் பஸ் பிடித்து பாலாஜி நர்சிங்கோம் சென்றேன் அதற்கு முன்னர் நேரடியாக என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரி. என் அண்ணன் உயிருடன் இருந்தபொழுது அவருக்கு குறைந்த இரத்த அழுத்தம் இருந்தது என்றால் சரியல்ல. என் அண்ணி என் அண்ணனுக்கு எவ்வாறு அடிப்பட்டது என்று கேட்டபொழுது அவர் தானாக கீழே விழுந்ததால் அடிப்பட்டதாக சொல்லியுள்ளார் என்றால் இல்லை. எனக்கு இந்த வழக்கை பற்றி எதுவும் தெரியாது என்றும் இறந்து போன நபர் என் மனைவியின் அக்கா வீட்டுக்காரர் என்பதால் பொய்சாட்சி சொல்கிறேன் என்றும் அன்றைய தேதியில் நான் கோவூரில் இருந்து வரவே இல்லை என்றால் சரியல்ல. நான் இந்த பக்கமே வரவே இல்லை

என்றும் போலீஸார் சொல்லி கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீஸார் என்னை விசாரிக்கவில்லை. எதிரிக்கும் எனது அண்ணனுக்கும் எவ்வித முன் விரோதமும் கிடையாது என்றால் எனக்கு நேரடியாக தெரியாது அண்ணி சொல்லிதான் தெரியும். இறந்துபோன எனது அண்ணனுக்கு குடிப்பழக்கம் உள்ளது என்றால் சரியல்ல. அவர் ஆட்டோ டிரைவர் என்றால் சரி. அவர் ஆட்டோவில் இருந்து கீழே இறங்கும் போது தடுமாறி விழுந்ததால் இறப்பு நேரிட்டது என்றால் சரியல்ல. எதிரி அடித்ததால் தான் என் அண்ணன் இறந்தார் என்று யாரோ சொன்னதை கேட்டு பொய்சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் அண்ணனுக்கு ஏற்கவே இருந்த நோயினாலும் அவர் தடுமாறி விழுந்ததாலும் அவர் இறந்தார் என்றும் அதைதான் அவர்கள் பாலாஜி மருத்துவமனையில் சொன்னார்கள் என்றால் சரியல்ல. என் அண்ணனை, அண்ணி சிசிக்சைக்காக˙ எத்தனை தடவை பாலாஜி மருத்துவமனைக்கு சென்றார்கள் என்றால் எனக்கு தெரியாது.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

Dt. 15-07-2022. II Addl. District Judge.